2020-21-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட (பக்கங்களின் எண்ணிக்கை : 2)

மாணவ-மாணவியருக்கு மட்டும்) SUBJECT CODE 22 PTM 206

REG.NO:

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : மே - 2023**

**எம்.ஏ. தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 50**

**இரண்டாம் பருவம்** **நேரம் : 3 மணி**

## தொல்காப்பியம் சொல்லதிகாரம்

**பகுதி – அ** **(10x1=10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக (K1)**

1. "வினாவும் செப்பே வினா..........".

(அ) விடைதானே (ஆ) எதிர்வரினே (இ) ஓம்பல் (ஈ) துணைப்பொருளே.

2. 'ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி' எது?

(அ) நான்காம் வேற்றுமை, (ஆ) இரண்டாம் வேற்றுமை

(இ) ஆறாம் வேற்றுமை (ஈ) மூன்றாம் வேற்றுமை

3. குடிப்பெயருக்கு எடுத்துக்காட்டுத தருக.

(அ) தச்சன் (ஆ) தந்தையர் (இ) சேரமான் (ஈ) இருவர்

4. குறிப்பு வினைமுற்றுச் சொற்கள் எத்தனை வகைப்படும்?

(அ) பத்து (ஆ) எட்டு (இ) ஆறு (ஈ) நான்கு

5 அச்ச உணர்வைக் குறிக்கும் சொல் எது?

(அ) கடி (ஆ) நனி (இ) உரு (ஈ) கெழு

**ஓரிரு சொற்களில் அல்லது தொடர்களில் விடையளிக்க.**

6. யாது, எவன் என்னும் இரு சொற்களின் தன்மையினைக் கூறுக.

7. சினைச் சொல்லுக்கு வினை நிகழும் இடத்து, ஒத்தியங்கும் வேற்றுமை உருபுகள் எவை?

8. சொற்களின் வகைகளைக் குறிப்பிடுக.

9. "கொல்" என்னும் இடைச்சொல் எப்பொருளில் வரும்?

10. திசைச்சொல் – விளக்கம் தருக.

**பகுதி – ஆ**

**கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும்**

**இரண்டு பக்க அளவில் விடையளிக்க.** ( 5 X 3= 15 **மதிப்பெண்**)

11. (அ) வினா விடை குறித்து தொல்காப்பியர் கூறும் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

ETHICAL PAPER

(த.பி.பா.)

(ஆ) சுட்டுப் பெயர்க்கிளவி, வண்ணச்சினைச் சொல், பலபொருள் ஒரு சொல் - குறிப்பு வரைக.

12. (அ) ஆகுபெயர் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

(அல்லது)

(ஆ) இரண்டாம் வேற்றுமை பற்றிய கருத்துகளைச் சான்றுகளுடன் தருக.

13. (அ) உயர்திணைப் பெயர்கள் விளியேற்கும் முறையினை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) சினைமுதற் பெயர், முறைப்பெயர் ஆகியனவற்றை விளக்கி எழுதுக.

14. (அ) வினையெச்ச வாய்ப்பாடுகள் குறித்த செய்திகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) இடைச்சொல்லின் பாகுபாடுகள் குறித்து தொல்காப்பியர் எங்ஙனம் உரைத்துள்ளார்?

15. (அ) உரிச்சொல்லின் பொது இலக்கணம் யாது? எடுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) இயற்சொல், திரிசொல், வடசொல் – குறிப்பு எழுதுக. .

## பகுதி –இ

**கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் கட்டுரை வடிவில் விடை தருக. (மதிப்பெண்** : 5 X 5 = 25)

16. (அ) இருதிணை, ஐம்பால், மூவிடம் பற்றி நீவிர் அறிந்தனவற்றை கட்டுரை வடிவில் தருக.

(அல்லது)

(ஆ) முதலாம் வேற்றுமையின் சிறப்பினையும் ஐந்தாம் வேற்றுமையின் பொருட்பாகுபாட்டினையும் எடுத்துரைக்க.

17. (அ) ஆறாம் வேற்றுமை, எழாம் வேற்றுமை குறித்த கருத்துகளை விரித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) வேற்றுமை மயங்கியல் வாயிலாக அறிய வரும் கருத்துகளை ஆய்ந்தெழுதுக.

18. (அ) 'விளிமரபு ' என்னும் இயல் வழி தொல்காப்பியர் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) பெயரியலில் இடம்பெறும் செய்திகளைக் கட்டுரை வடிவில் எழுதுக.

19. (அ) வினைமுற்று பற்றி தொல்காப்பியர் கூறுவன யாவை? கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) இடைச்சொற்கள் எவ்வப்பொருளில் வருகின்றன என்பதை விவரிக்க.

20. (அ) உரிச்சொற்களின் சிறப்பியல்புகளை எடுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) தொகைமொழிகள் குறித்து எச்சவியல் தரும் செய்திகளைச் சான்றுகளுடன் விளக்குக.

ETHICAL PAPER

*******